# மதுரையில் மழை நீரை வடியவைக்க ராட்சத மின் மோட்டார்கள், பொறியாளர்கள் மும்முரம்; 20 இடங்களில் மருத்துவ முகாம்கள்

## முதல்வர் ஸ்டாலின் தகவல்

**மதுரை, அக். 26—**

**மதுரை மாவட்டத்தில் நேற்று கனமழை பெய்ததையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் என்னென்ன என்பதை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ளார்.**

இது குறித்து சமூக வலைதளப் பதிவில் அவர் கூறியிருப்பதாவது:–

''மதுரை மாவட்டத்தில் நேற்று பெய்த கனமழையின் காரணமாக, மதுரை மாநகரின் பல்வேறு பகுதிகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை அறிந்து, உடனடியாக அங்கு மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வணிகவரித் துறை அமைச்சர் மூர்த்தி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் ஆகியோரை அனுப்பி வைத்தேன்.

மேலும், மதுரை மாவட்ட கலெக்டரையும் தொடர்புகொண்டு கள நிலவரம் குறித்து அறிந்து, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தி உள்ளேன்.

குடியிருப்புப் பகுதிகளில் மழைநீரை வடிய வைக்க ராட்சத மின் மோட்டார்களும் பொறியாளர்களும் பணியாளர்களும் அருகில் உள்ள நகராட்சிகளில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

மருத்துவ முகாம்கள் 20 இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் பாதிக்கப்பட்ட பகுதி மக்கள் தேவையான வசதிகளுடன் மூன்று முகாம்களில் பாதுகாப்பாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மாவட்டத்தின் கண்காணிப்பு அலுவலர் நேற்றே அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

தலைமைச் செயலாளர் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையர் ஆகியோர் பணிகளைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். மதுரை மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் இயல்பு நிலையைக் கொண்டு வரப் போர்க்கால அடிப்படையில் அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

### கலெக்டருக்கு உத்தரவு

மதுரையில் கனமழை பெய்து வருவதையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (25–ந் தேதி) மதுரை மாவட்ட கலெக்டர் சங்கீதாவை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டார். கனமழையை ஒட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து கேட்டறிந்தார்.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென்றும், களத்திற்கு சென்று சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளவும் வணிகவரி துறை அமைச்சர், தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் மற்றும் மாவட்ட கலெக்டருக்கும் முதலமைச்சர் உத்தரவிட்டார்.



மதுரை பொதிகை நகரில் உள்ள முதியோர் இல்லத்தில் புகுந்த மழைநீர்

# மதுரையில் கொட்டித் தீர்த்த கனமழை: வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்ததால் மக்கள் அவதி

## தண்ணீரை வெளியேற்ற 3 நாட்கள் ஆகும்: அமைச்சர்கள் மூர்த்தி, பழனிவேல் ராஜன் பேட்டி

**மதுரை, அக். 26—**

**மதுரையில் கடந்த சில தினங்களாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவும் பலத்த மழை பெய்தது. இதனால், தாழ்வான பகுதிகளில் மழைநீர் குளம்போல் தேங்கியது. குறிப்பாக, செல்லூர், புதூர், கூடல்புதூர், ஆனையூர் உள்ளிட்ட பகுதிகளில், வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. இதனால், மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டது.**

புறநகர் பகுதிகளான புதூர், சர்வேயர் காலனி, பனங்காடி, பாரத நகர்,பி.பி.குளம், முல்லை நகர் பகுதியில் குடியிருப்புகளை மழைநீர் சூழ்ந்தது. மதுரை கூடல் நகர் பொதிகை நகரில் உள்ள முதியோர் இல்லத்தில் மழைநீர் புகுந்ததால் அங்கிருந்த முதியோர்கள் கடும் அவதியடைந்தனர்.

இந்நிலையில் மதுரையில் தொடர்ந்து மழை பெய்த நிலையில், வைகை ஆற்றில் அமைச்சர்கள் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன், மூர்த்தி ஆய்வு செய்தனர். அவருடன் மாவட்ட கலெக்டர், கண்காணிப்பு அலுவலர் ஆகியோரும் ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வு மேற்கொண்ட பின்னர் அமைச்சர் மூர்த்தி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: மதுரையில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழையால் வைகை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. குடியிருப்பு பகுதியில் சூழ்ந்துள்ள தண்ணீரை அகற்றுவதற்கு தொடர்ச்சியாக பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உணவுகள் ஏற்பாடு செய்யப்பட்டு பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மதுரையில் பல்வேறு இடங்களில் சூழ்ந்துள்ள தண்ணீரை வெளியேற்ற இன்னும் 3 நாட்கள் ஆகும் என்று கூறினார்.

# மதுரை அருகே கண்மாயில் மூழ்கி தந்தை —மகன் உயிரிழப்பு

**மதுரை, அக். 26—**

**மதுரை அருகே கண்மாயில் மூழ்கி தந்தைமகன் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.**

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே உள்ள மேல மட்டையான் கிராமத்தைச் சேர்ந்தவர் அழகர் (வயது 35). இவருக்கு திருமணமாகி மனைவி மற்றும் 2 மகள்கள், ஒரு மகன் உள்ளனர். அழகர் தனது குடும்பத்தினருடன் கீழ மட்டையான் கிராமத்தில் நடைபெற்ற புரட்டாசி பொங்கல் திருவிழாவுக்கு சென்றார். பின்னர் அழகர் தனது 4 வயது மகன் ஜெகதீஸ்வரனை அழைத்துக்கொண்டு அருகில் உள்ள கண்மாய்க்கு குளிக்கச் சென்றார்.

அப்போது மகன் தனக்கு நீச்சல் கற்றுத்தருமாறு கூறியதாக தெரிகிறது. இதையடுத்து அழகரும் தனது மகனுக்கு கண்மாயில் நீச்சல் கற்றுக் கொடுத்தார். அப்போது 2 பேரும் ஆழமான பகுதியில் சென்று சிக்கியுள்ளனர். சேறும் சகதியுமாக இருந்ததால் அவர்களால் அங்கிருந்து வெளியேற முடியவில்லை. 2 பேரும் சிறிது நேரத்தில் தண்ணீரில் மூழ்கி அடுத்தடுத்து பரிதாபமாக இறந்தனர்.

இதனிடையே கணவர் மற்றும் மகனை காணவில்லை என மனைவி மற்றும் உறவினர்கள் பல்வேறு இடங்களில் தேடிப் பார்த்தனர். இன்று காலை கீழ மட்டையான் கண்மாயில் அழகர், ஜெகதீஸ்வரன் உடல்கள் மிதந்தன. இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த கிராமத்தினர் உடனே காடுபட்டி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். விரைந்து வந்த அவர்கள் தந்தை, மகன் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக சோழவந்தான் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.முன்னதாக 2 பேரின் உடல்களை பார்த்து குடும்பத்தினர் கதறி அழுதது பரிதாபமாக இருந்தது.

இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கோவில் திருவிழாவுக்கு வந்தவர்கள் கண்மாயில் மூழ்கி பலியான சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.


**FIVE STAR BUSINESS FINANCE LIMITED**

CIN : L65991TN1984PLC010844.

Regd & Corpoate Office : New No.27 Old No.4 Taylor's Road, Kilpauk, Chennai - 600 010

E mail : secretary@fivestargroup.in Website : www.fivestargroup.in Tel : +91 44 46106200

**NOTICE OF LOSS OF SHARE CERTIFICATE**

1. V.P. Ramamurthi, S/o Late Perumaliah, residing at No.11 Enginees Avenue, 20th Street, Tansi Nagar, Velachery, Chennai – 600 041, the registered holder of the undermentioned shares held in the above said company, Notice is hereby given that the following Share Certificates issued by the company have been reported lost or misplaced or stolen and the registered holders thereof/claimants thereto have applied to the company for the issue of Duplicate Certificates

| Sl.No | Name of Shareholders | Folio No. | Share Certificate No | Distintive Nos From | Distintive Nos To | No.of Shares |
|---|---|---|---|---|---|---|
| 1 | V.P.Ramamurthi | 2203 | N/A | N/A | N/A | 5000 |
| Details of Old Share Certificates | V.P.Ramamurthi | 2203 | 14528 - 14532 | 1447101 | 1447600 | 500 |

Any person(s) who has have any claim(s) in respect of the said Share Certificates should lodge claim(s) with the company at it corporate office at the address New No.27 Old No.4 Taylor's Road, Kilpauk, Chennai - 600 010 within 15 days of publication of this notice after which no claim will be entertained and the Company will proceed to issue duplicate Share Certificates .

**Date : 26-10-2024** Sd/- V.P.Ramamurthi



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**பரமக்குடி**
**O.S.NO.33/2023**

கருப்பையா,
..வாதி

எதிர்

K.S.சேஷாத்திரி,
த/பெ.சம்பத்,
இந்தியன் வங்கி குடியிருப்பு
வேளச்சேரி, சென்னை .
..உத்தேச 5ஆம் பிரதிவாதி

**அறிவிப்பு**

இந்த நம்பர் வாதி ஷை உத்தேச 5ஆம் பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதில் ஷை உத்தேச 5ஆம் பிரதிவாதி சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக **13.11.2024**–ந் தேதி வாய்தா ஏற்பட்டிருக்கிறது. ஷை வழக்கில் ஷை உத்தேச 5ஆம் பிரதிவாதிக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் **13.11.2024**–ம் தேதி காலை 10.00 மணிக்கு நேரிலோ, அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறுபட்சம் ஷை வழக்கு ஷை உத்தேச 5–ஆம் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

**V.ராஜேந்திரன், B.Sc.,B.L.,**
**வழக்கறிஞர்**
**பரமக்குடி**


# திருப்பதி கோயிலில் தரிசனம் செய்ய பாதயாத்திரையாக வரும் பக்தர்களுக்கு கட்டுப்பாடு: தேவஸ்தானம் அறிவிப்பு

**திருப்பதி, அக். 26—**

**திருப்பதி ஏழுமலையான் கோயிலில் தரிசனம் செய்ய பாதையாத்திரையாக ஸ்ரீவாரி மெட்டு வழியாக வரும் பக்தர்களுக்கு தேவஸ்தானம் பல்வேறு கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளது.**



திருப்பதி ஏழுமலையான் கோயிலில் நாள்தோறும் லட்சக்கணக்கான மக்கள் தரிசனம் செய்து செல்கின்றனர். சாலை மார்க்கமாக வந்து செல்லும் பக்தர்கள் ஒரு பக்கம் இருந்தாலும், ஸ்ரீவாரி மெட்டு, அலிபிரி மலைபாதைகள் வழியாக வந்து செல்கின்றனர்.

இந்நிலையில் பக்தர்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் மற்றும் அறிவுரைகளை தேவஸ்தானம் அறிவிப்பாக வெளியிட்டு உள்ளது. அதில் உள்ள விவரங்கள் வருமாறு;

★ 60 வயதுக்கும் மேல் உள்ளவர்கள், குறிப்பாக நீரிழிவு, ரத்த அழுத்தம், ஆஸ்துமா,வலிப்பு, மூட்டுவலி உள்ளவர்கள் பயணிக்க வேண்டாம்.

★ உடல்பருமன், இதய அறுவை சிகிச்சை செய்தவர்கள் மலை ஏறுவதை முற்றிலும் தவிர்த்து விட வேண்டும்.

★ திருப்பதி தேவஸ்தானம் கடல் மட்டத்தில் இருந்து அதிக உயரத்தில் உள்ளதால் ஆக்சிஜன் அளவு குறைவாக இருக்கும். எனவே, இதய நோய், ஆஸ்துமா தொந்தரவு உள்ளவர்கள் பயணிக்க வேண்டாம்.

★ நீண்டநாட்களாக மருந்துகள் எடுத்துக் கொள்பவர்கள், பயணத்தின் போது தேவையான மருந்துகளை கைவசம் எடுத்துச் செல்வது நலம்.

★ ஏதேனும் அவசர மருத்துவ சிகிச்சை வேண்டுவோர், கோயில் செல்லும் மலைப்பாதையில் 1500வது படிக்கட்டு, கலிகோபுரம் மற்றும் பாஸ்கர்ல சந்நிதி இடங்களில் தேவஸ்தானம் சார்பில் அமைக்கப்பட்டு உள்ள மருத்துவக் குழுக்களை அணுகலாம்.

★ திருமலையில் உள்ள மருத்துவமனையில் 24 மணிநேரமும் உரிய மருத்துவ சிகிச்சைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

★ நீரிழிவு நோயாளிகளுக்கு உரிய சிகிச்சைகள், கிட்னி தொடர்பான தொந்தரவுகளுக்கு சிகிச்சைகள் போன்றவற்றுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

இவ்வாறு அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

# ஓடும் ரயிலிலிருந்து கழன்று விழுந்த பிரேக் ஷூ: விவசாயி பலி

ராமநாதபுரம், அக். 26—

ஓடும் ரயிலிலிருந்து பிரேக் ஷூ கழன்று விழுந்ததில் படுகாயம் அடைந்த விவசாயி பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ராமேஸ்வரத்தில் இருந்து மதுரை நோக்கி சென்று கொண்டிருந்த ரயிலின் பிரேக் ஷூ திடீரென கழன்று விழுந்தது. அது தண்டவாளம் வழியாக சென்ற விவசாயி சண்முகவேல் தலையில் விழுந்தது. இதில் சம்பவ இடத்திலேயே விவசாயி சண்முகம் உயிரிந்தார்.

இதை பார்த்த பொதுமக்கள் உடனடியாக போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து சண்முகவேலுவின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்க அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கார் டயர் வெடித்து விபத்து: 9 மாத குழந்தை பலி

சேலம், அக். 26—

சேலம் – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் முத்தம்பட்டி அருகே கார் டயர் வெடித்து விபத்துக்குள்ளானத்தில் 9 மாத குழந்தை பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சேலம் – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் முத்தம்பட்டு பேருந்து நிறுத்தம் அருகே சென்றுகொண்டிருந்த காரின் டயர் திடீரென வெடித்ததில், ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த கார் சாலையின் மேம்பால சுவரில் மோதி விபத்துக்குள்ளானது.

இதில், காரில் இருந்து 9 மாத குழந்தை சம்பவ இடத்திலேயே பலியானது. குழந்தையின் பெற்றோர்கள் தீபக் அழகப்பன் மற்றும் தெய்வானை படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# மருத்துவமனையில் வீடியோ பதிவு விவகாரம்: வருத்தம் தெரிவித்து யூடியூபர் இர்பான் கடிதம்

**சென்னை, அக். 26—**

**மருத்துவமனையில் குழந்தையின் தொப்புள் கொடியை அறுப்பது போன்று வீடியோ பதிவு செய்து வெளியிட்டது தொடர்பாக யூடியூபர் இர்பான் வருத்தம் தெரிவித்து கடிதம் எழுதியுள்ளார்.**

சென்னையை சேர்ந்த யூடியூபர் இர்பான் ஆசிபா தம்பதிக்கு, ஜூலை 24ந்தேதி தனியார் மருத்துவமனையில் குழந்தை பிறந்தது. குழந்தை பிறக்கும் போது, அறுவை சிகிச்சை அறையில் குழந்தையின் தொப்புள் கொடியை வெட்டும் வீடியோவை, இர்பான் பகிர்ந்திருந்தார். இந்த வீடியோ சர்ச்சையான நிலையில், சம்பந்தப்பட்ட மருத்துவமனை 10 நாட்கள் செயல்பட தடை விதிக்கப்பட்டது. மேலும், 50,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

அதேபோல, பிரசவம் பார்த்த டாக்டர் நிவேதிதா மற்றும் இர்பான் மீது நடவடிக்கை எடுக்கும்படி, செம்மஞ்சேரி காவல் நிலையத்திற்கு, மருத்துவ ஊரக நல பணிகள் துறை அதிகாரிகள் புகார் அளித்தனர். இதனிடையே இந்த விவகாரம் தொடர்பாக இர்பானுக்கு நோட்டீசும் அனுப்பப்பட்டு இருந்தது.

இந்த நிலையில், குழந்தையின் தொப்புள் கொடியை வெட்டிய விவகாரம் தொடர்பாக வருத்தம் தெரிவித்து மருத்துவத்துறைக்கு இர்பான் கடிதம் அனுப்பியுள்ளார். சென்னை தேனாம்பேட்டையில் உள்ள மருத்துவ ஊரக நலப் பணிகள் இயக்குனர் ராஜமூர்த்தியிடம் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது.

வெளிநாட்டில் இருப்பதால் உதவியாளர் மூலமாக தனது தரப்பு வருத்தத்தை கடித்தத்தின் மூலமாக தெரிவித்துள்ளார். அதில், எந்த உள்நோக்கத்துடனும் வீடியோ பதிவு செய்யவில்லை என்றும் மருத்துவ சட்டங்களை மதிப்பதாகவும் இர்பான் குறிப்பிட்டுள்ளார்.

# நிறுவனங்கள் வருமான வரிக் கணக்கு தாக்கல்: நவம்பர் 15 ந்தேதி வரை நீட்டிப்பு

**சென்னை, அக். 26—**

**நிறுவனங்கள் வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் அக்டோபர் 31 ந்தேதி இருந்ததை, நவம்பர் 15 ந்தேதி வரை நீட்டித்து மத்திய நேரடி வரிகள் வாரியம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.**

வருமான வரி விதிகளின்படி, வரிக்கு உட்பட்டவர்கள் ஆண்டுதோறும் வருமான வரி மற்றும் அதன் கணக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்பது அடிப்படை விதியாகும். மாதந்தோறும் வருமானம் பெறுபவர்கள், தங்களது பான் நம்பரை பயன்படுத்தி, வருமான வரித்துறையின் வெப்சைட்டில் இந்த கணக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

சிலர் வரி ஏய்ப்பு செய்துவிடுவதால், வருமான வரி ஏய்ப்பு பற்றி தகவல் அளிப்போருக்கு பரிசு வழங்கும் திட்டத்தை ஒன்றிய அரசு அண்மையில் அறிவித்திருந்தது. அதாவது, கணக்கில் காட்டப்படாத வருமானம், சொத்துகள் மற்றும் வரி ஏய்ப்பு விவரங்கள் பற்றி தகவல் அளிப்போருக்கு, அல்லது பினாமி சொத்துகள் பற்றி தகவல் அளிப்போருக்கு ரூ.1 கோடி வரை பரிசு வழங்கப்படுகிறது.

அதேபோல, வருமான வரி தாக்கல் செய்யத் தவறினால் அபராதம் வசூலிக்கப்படுகிறது. நடப்பாண்டில் நிறுவனங்கள் வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதற்கான காலக்கெடு அக்டோபர் 31 ந்தேதி வரை விதிக்கப்பட்டிருந்தது. இந்த சூழலில், மத்திய நேரடி வரிகள் வாரியம் இதற்கான காலக்கெடுவை நீட்டித்துள்ளது. அதன்படி, நிறுவனங்கள் வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதற்கான காலக்கெடு நவம்பர் 15 நந்தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

# சென்னை ரிசர்வ் வங்கியில் பெண் காவலரின் துப்பாக்கி வெடித்ததால் பரபரப்பு

**சென்னை, அக். 26—**

**சென்னை ரிசர்வ் வங்கியில் பாதுகாப்புப் பணியில் இருந்த பெண் காவலரின் துப்பாக்கி வெடித்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.**

சென்னை ராஜாஜி சாலையில் அமைந்துள்ள ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா பகுதி எப்பொழுதுமே முழுவதுமாக போலீசார் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியாகும். இந்நிலையில் இன்று அதிகாலை திடீரென ரிசர்வ் வங்கியின் உள்ளே ஆபத்து அலாரம் ஒலித்துள்ளது. இதனால் அசம்பாவித சம்பவம் நிகழ்ந்துவிட்டதோ என பணியில் இருந்த பெண் காவலர் தர்ஷினி பாதுகாப்பிற்காக வைத்திருந்த துப்பாக்கியில் தோட்டாக்களை லோடு செய்துள்ளார். பின்னர் ஆர்.பி.ஐ வளாகம் முழுவதும் சென்று நோட்டமிட்டு பார்ப்பதில் அந்த பகுதியில் யாரும் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டது.

பின்னர் காவலர் தர்ஷினி லோடு செய்த தோட்டாவை துப்பாக்கியில் இருந்து எடுக்க முயன்றுள்ளார். அப்போது எதிர்பாராத விதமாக துப்பாக்கி வெடித்தது. இதில் குண்டு சுவர் மீது பாய்ந்ததால் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. இருப்பினும் இந்த சம்பவம் தொடர்பாக காவல்துறை உயர் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.


**TULSYAN NEC LIMITED**

**Regd. Off. :** 1st Floor, Apex Plaza, 3, Nungambakkam High Road, Chennai - 600 034. **Phone :** 044 - 6199 1060. **Fax :** 044 - 6199 1066. **email :** investor@tulsyannec.in **Website :** www.tulsyannec.in **CIN No. :** L28920TN1947PLC007437

**Extract of Standalone and Consolidated Unaudited Financial Results for the Quarter and Six Months ended September 30, 2024 under Ind AS**

(₹ in Lakhs)

| Sl. No. | Particulars | Standalone: Quarter ended September 30, 2024 (Unaudited) | Standalone: Year to date figures September 30, 2024 (Unaudited) | Standalone: Previous quarter ended September 30, 2023 (Unaudited) | Consolidated: Quarter ended September 30, 2024 (Unaudited) | Consolidated: Year to date figures September 30, 2024 (Unaudited) | Consolidated: Previous quarter ended September 30, 2023 (Unaudited) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | Total Income from Operations | 18,115.08 | 44,340.24 | 25,150.89 | 19,945.52 | 47,608.03 | 26,189.45 |
| 2. | Net Profit/(Loss) for the period (before tax and exceptional items) | (476.61) | (437.33) | (57.36) | (434.71) | (376.63) | (71.22) |
| 3. | Net Profit/(Loss) for the period before tax (after exceptional items) | (476.61) | (437.33) | (57.36) | (434.71) | (376.63) | (71.22) |
| 4. | Net Profit/(Loss) for the period after tax (after exceptional items) | (476.61) | (437.33) | (57.36) | (434.71) | (376.63) | (71.22) |
| 5. | Other comprehensive Income (net of tax) | - | - | 12.19 | - | - | 12.19 |
| 6. | Total comprehensive Income for the period [comprising Profit/(Loss) for the period (after tax) and Other comprehensive Income (after tax)] | (476.61) | (437.33) | (45.16) | (434.71) | (376.63) | (59.03) |
| 7. | Equity Share Capital (face Value of Rs.10 per share) | 1,655.14 | 1,655.14 | 1,655.14 | 1,655.14 | 1,655.14 | 1,655.14 |
| 8. | Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year | | 34,644.87 | | | 32,345.93 | |
| 9. | Earnings Per Share (of Rs.10/- each) (for continuing and discontinued operations) (a) Basic | (2.88) | (2.64) | (0.35) | (2.63) | (2.28) | (0.43) |
| | (b) Diluted | (2.88) | (2.64) | (0.35) | (2.63) | (2.28) | (0.43) |

**NOTES :**

1. The above results have been reviewed and recommended by the Audit Committee of the Board and has been approved by the Board of Directors at its meeting held on 25th October 2024.
2. The statement has been prepared in accordance with the Companies (Indian Accounting Standards) Rules, 2015 (Ind AS) prescribed under section 133 of the Companies Act, 2013 and other recognised accounting practices and policies to the extent applicable.
3. The above is an extract of the detailed format of the unaudited Standalone and Consolidated financial results for the quarter and six months ended September 30, 2024, filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing and Obligations Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Unaudited Financial Results are available on the website of the BSE Limited i.e. **www.bseindia.com**, on the Stock Exchange where the Company's shares are listed and on the website of the Company i.e., **www.tulsyannec.in**
4. Company's asset monetisation program is on track and as on date, the Asset held for sale has been sold and the proceeds have been utilised for redemption / repayment of 'Secured Non Convertible Debentures. With this there will be substantial reduction in the incidence of finance costs in future.
5. The Company has organised the business into three segments viz.Steel Division, Synthetic Division, Power. This reporting complies with the Ind AS segment reporting principles. Inter Companies Sales Rs.1638.58 lakhs and balance Rs.231.54 lakhs eliminated in Consolidated Financials.
6. The previous year figures have been regrouped/re-classified wherever necessary.

**for Tulsyan NEC Limited**
**Sd/-**
**Sanjay Agarwalla**
Whole time Director
DIN : 00632864

Place : Chennai
Date : 25th October, 2024